# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.17/2024** **நாள் : 10.02.2024**

ரூ.37.10 கோடி மதிப்பீட்டில் செம்பரம்பாக்கம் 530 எம்.எல்.டி. நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச்சாலை வழியாக சவீதா பல் மருத்துக் கல்லூரி வரை இரண்டாவது வரிசை குழாயின் மீதமுள்ள பகுதிகளை இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

சென்னை குடிநீர் வாரியம் தகவல்

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் சென்னை பெருநகர மக்களுக்கு கூடுதலாக குடிநீர் வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக செம்பரம்பாக்கம் 530 எம்.எல்.டி. நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச்சாலை வழியாக சவீதா பல் மருத்துக் கல்லூரி வரையில், நசரத்பேட்டை, சென்னீர்குப்பம் மற்றும் பூந்தமல்லி ஆகிய பகுதிகளில் ஆங்காங்கே விடுபட்ட, 2000 மி.மீ விட்டமுடைய இரண்டாவது வரிசை குழாயினை 1.75 கிலோ மீட்டர் நீளத்திற்கு, கண்டறிந்து இணைக்கும் பணிகள் ரூ.37.10 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

தற்போது, செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட குழாய் இணைக்கும் பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப்பட்டு சென்னை பெருநகர மக்களுக்கு மேலும், கூடுதலாக நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் (ஆக மொத்தம் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர்) வழங்க இயலும். இத்திட்டத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர் மற்றும் அடையாறு மண்டலங்களில் உள்ள பகுதிகள் மற்றும் புறநகர் பகுதிகளான தாம்பரம், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 19 இலட்சத்து 63 ஆயிரம் பொதுமக்கள் பயன் பெறுவர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater